
# இட்ட சாவம் முட்டியது



பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

# இட்ட சாவம் முட்டியது
## (இராசீவின் இறுதி)

பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

| | | |
|---|---|---|
| முதல் பதிப்பு | : | தி.பி. 2025, விடை : 7 (21-5-1994) |
| மறு பதிப்பு | : | தி.பி. 2029, துலை : 15 (1-11-98) |
| நூல் தலைப்பு | : | இட்ட சாவம் முட்டியது |
| ஆசிரியர் | : | **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** |
| வெளியீடு | : | **தென்மொழி நூல்வெளியீட்டு விற்பனையகம்,**<br>5, அருணாசலத் தெரு,<br>திருவல்லிக்கேணி,<br>சென்னை - 600 005. |
| அச்சாக்கம் | : | தென்மொழி அச்சகம்,<br>சென்னை - 5 |
| உரிமை | : | தாமரை பெருஞ்சித்திரனார் |
| தாள் | : | வெள்ளைத்தாள் (11.6) |
| பக்கங்கள் | : | 40 |
| அளவு | : | மணிமுடி (கிரௌன்) |
| படிகள் | : | 2000 |
| விலை | : | உரு. 10.00 |

## முன்னுரை:

கலையோ, இலக்கியமோ கலைக்கானதோ, இலக்கியத் திற்கானதோ அன்று. அவை மக்களுக்கானவை – மக்கள் வாழ்க்கைக்கானவை.

உரோம் நகரம் பற்றி எரிந்து கொண்டிருக்கும்போது கின்னர(பிடில்) இன்னிசை இசைத்துக் கொண்டிருந்தவன் சிறந்த கலைஞனாக எண்ணத் தகுந்தவன் அல்லன்.

ஒரு நாட்டில் மக்கள் அவலங்கள் தாண்டவமாடிக் கொண்டிருக்கையில், அவற்றைக் காணவோ, உணரவோ தம் கலை இலக்கிய வடிவங்களின்வழி வெளிப்படுத்தவோ மறுத்து — அழகியல் உணர்வில் இயற்கையையும், இவ் வாளுமைக் குமுகத்தில் அடிமையாக்கப்பட்டுள்ள பெண்ணை அழகுப் பொருளாய் வண்ணித்தும் பாடிக் கொண்டிருப்பவன் கலைஞனாகவோ, இலக்கியப் படைப்பாளியாகவோ ஆகிவிடமாட்டான்.

அத்தகைய இலக்கிய எழுத்தர்கள் ஆளுமையர்களின் நலனுக்கானவர்களே அல்லாமல் மக்களின் நலனுக் கானவர்கள் அல்லர்.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் அவ்வகையில் மக்கள் நலனுக்கான இலக்கியப் படைப்பாளிகளை விரல் விட்டு எண்ணுவதுகூடக் கடினமே.

இயற்கையையும், கடவுளையும், காதலையும் தம் உயர் எழுத்தாற்றலால் எழுதிக் கொட்டியவர்களே அதிகம். தமிழக மக்களின் அடிமைத்தனத்தையோ, அவர்களுக்கான விடுதலையையோ உள்ளடக்கமாகக் கொண்ட இலக்கியங்க ளைக் காண்பது என்பது குதிரைக் கொம்பாகவே உள்ளது.

ஒவ்வொரு விடுதலைப் போராட்ட நாட்டிலும் அவ்வந் நாட்டு மக்களின் விடுதலைக்கான இலக்கியங்கள் ஏராளமாய் வளர்ந்தன. ஆனால் தமிழகம் இலக்கிய அளவிலும் இருண்டே கிடக்கிறது.

அவ்விலக்கிய இருட்டில் மின்னும் சில விண்மீன்க

ளுக்கிடையில் நிலவாய் ஒளிர்பவரே நம் அருந்தமிழ்ப் பாவலரேறு ஐயா அவர்கள்.

"ஓங்கிக் கட்டிய உயர்ந்த மாளிகை!
உலாவக் கட்டிய மேற்புற மாடிகள்;
தூங்கக் கட்டிய தனிநிலை அறைகள்!
தொங்கு மாடங்கள்; ஊஞ்சல் தூலிகை!
தாங்கிய விளக்குகள்! பலகணித் திரைகள்!
தரையெலாம் விரிப்புகள்! பல்வண்ண ஓவம்!

— என்று பணக்காரர்களின் வாழ்நிலையை விரிவாய்ச் சுட்டிக் காட்டிடும் அவர்,

பாங்காய் இவற்றுளே குபுகுபு குபு — வெனப்
பாட்டாளி மக்கள் புகுகின்றார் பாருங்கள்!
ஓங்கிய செல்வரே, உணருங்கள்! அப்படி
ஒருநாள் வரத்தான் போகிறது — இவ்
வுலகம் பொதுவென ஆகிறது!" — *கனிச்சாறு*

— என்று ஓங்கிச் சொல்லி ஏழை மக்களின் எழுச்சியைக் காட்சியாக்கியவர்.

"ஆட்டிப் படைக்கும் அரசுக்கும், ஆரியர்க்கும்
ஈட்டியால் செந்தமிழர் தீட்டும் இறுதியுரை..."

— என்று வாட்டி வருத்தும் ஆளுமையர்களை ஈட்டியால் தமிழர்க்குச் சுட்டிக் காட்டியவர்.

எண்பதுகளில் எழுச்சியுற்ற ஈழ விடுதலைப் போரை ஒடுக்கக் கிளம்பிய இந்திய வல்லாண்மையர்களின் உருவாய் இருந்த இராசீவின் கொடுஞ் செயல்கண்டு கொதிப்புற்றது, தமிழகம்.

ஆளுமை அரம்பன் இராசீவின் கொடுஞ்செயலால் ஏற்பட்ட நம் ஐயா அவர்களின் உள்ளக் கொதிப்பின் சிதறலே **'இட்ட சாவம் முட்டுக!'**

தமிழர்தம் வாழ்வுரிமைக்காய் அணிதிரண்டு கருவி ஏந்திச் செயலாற்ற வல்ல ஒரு பெரும்படை அக்கால் இருந்திருப்பின், எதை அரசியல்வழி முடிவெடுத்துச் செயலாற்றிடுமோ, அதை நம் பாவலரேறு ஐயா அவர்கள்

தனிநிலையினராய்க் கையற்ற நிலையில், திரண்ட மனக் கொதிப்புரைகளைச் சொல்லீட்டிகளாய்க் கொட்டி, எழுதி இட்ட சாவம்தான், மூன்றாண்டுகள் கழித்து முட்டியது.

''நின்னுடல் வெடித்துச்
சுக்குநூ றாகச் சிதறுக! சூதனே!
திக்கிநா விழுக்க! நெஞ்சு தெறிக்க!''

— என்று அக்காலத் தமிழர்களின் நெஞ்ச அவலங்களைச் சுமந்த நம் பாவலரேறு ஐயா அவர்களின் கொதிப்புரையே, அவ்வரம்பனின் – சூதனின் – பூதனின் – உடலைத் தெறிக்கச் செய்தது.

மூன்றாண்டுகள் கழித்து முட்டிய சாவத்தின் நிகழ்வையும், காரணிகளையும் விளக்கித் *'தென்மொழி'* (1991, 1992 – சூலை, செப், நவம், சன.) இதழ்களில் எழுதப் பெற்ற ஆசிரியவுரை – அக்கால அரசியல், குமுகவியல் அழுத்தங்களை அளாவித் தொகுத்தளித்த நேரியவுரை.

புற நிகழ்வுகளை மட்டும் காணும் கிறுக்கர்களின் கிறுக்கல்கள் அல்ல அவை.

அரசியல், குமுக்வியலில் ஐயா அவர்களின் ஆழப் பதிவே – அவர்தம் பாக்களில் முட்டியும், உரைகளில் அளாவிச் சுட்டியும் காட்டப் பெற்றுள்ளது.

பொய்யாய்ப் போலியாய்க் குவிந்து கிடக்கும் எழுத்துக் குவியல்களுக்குள் மெய்யாய் எழுதப்பெற்ற இத்தகைய ஆழ்ந்த அரசியல் இலக்கியப் படைப்பு மக்களால் ஒப்பிட்டு உணரப் பட வேண்டியவை.

பலரும் கேட்டுக்கொள்ள, அதனைத் தனி வெளியீடாய்க் கொண்டு வந்துள்ளோம்.

தமிழர் இனத்தின், வாழ் நிலத்தின் உரிமை மீட்புக்கான தொடர்பணியில் இச்சிறு வெளியீடு பெரும் பயனைக் கொண்டது என்பதை எண்ணி இவ்வெளியீட்டால் நிறைவுறுகிறோம்.

**2024 – கன்னி – 15** **— வெளியீட்டுக் குழு,**
**1.10.1993** **தென்மொழி, சென்னை - 5**

# இட்ட சாவம் முட்டுக!

முண்டையின் மகனே! முண்டையின் மகனே!
கொண்டையில் லாத ஒழுகிய முழக்குழல்
கூர்த்த கலுழன் வெவ்வாய் மூக்கின்
ஆர்த்த செருக்கோ டாண்மையின் தோற்றத்து
நாவலந் தீவின் நாயகி யென்ன
மேவலந் திரிந்த அரசியல் மேனகை—
ஆரியக் கௌடிலி — இந்திரா என்னும்
பூரியை பிதுக்கிய முண்டையின் மகனே!

சிங்களக் கொலைஞன் செயவர்த் தனன்எனும்
வெங்கணன் விரித்த வலையினில் விழுந்து
செந்தமிழ் இனத்தைச் சீரழித் திடவே
முந்து'இரா சீவ்' — எனும் முண்டையின் மகனே!

உலகப் பந்தின் உயிர்ச்செறி எம்மினம்
விலகாக் குறியினன் ஆகி, விதிர்ப்புற
யாழ்த்தமிழ் மக்களின் யாக்கைகள் எல்லாம்
போழ்த்துயிர் குடிக்கும் அரக்கப் பூதனே!

நீயுநின் துணையும் நின்னிரு மக்களும்
ஏயுமிவ் வுலகத்து இருக்குநாள் தோறும்
எந்தமிழ் நல்லினத் தேற்றம் குலைதலால்
வெந்தழி யும்நாள் விரைந்துனக் கெய்துக!

இடும்பைப் பிறப்பே! ஏழிரு கோடிக்
குடும்பம் அழிக்கும் கொடியனே! நின்னைக்
கடும்புலி வரியெனச் சாவு கவ்வுக!
திடுமென நினையொரு தீச்சுழல் சூழ்க!

சூழ்ச்சியும் அரக்கமும் அதிகாரச் சூழலும்
வீழ்ச்சி யுறுக! நின்னுடல் வெடித்துச்
சுக்குநூ றாகச் சிதறுக! சூதனே!
திக்கிநா விழுக்க! நெஞ்சு தெறிக்க!

எந்தமிழ் இளையரும் ஏழைப் பெண்டிரும்
நொந்துயிர் துடிக்கையில் உளக்குலை நொய்ந்தே
இட்ட சாவங்கள் இணைந்து கூடி
முட்டுக நின்னுயிர்! மூளி, நீ யாகுக!

தமிழினம் தகைக்கும் தருக்கனே! நின்குடி
அமிழுக! ஆங்கோர் அணுவின்றி அழிக!
தணலும்எம் நெஞ்சின் தவிப்பை
மணல்,நீர், தீ, வளி, வானம் — ஆற் றுகவே!

*— சுவடி : 24; ஓலை : 3. மார்ச்சு – ஏப். 1988*

# இட்ட சாவம் முட்டியது!

## (இராசீவின் இறுதி)

மூவகைப் பார்ப்பனீயக் கோட்பாடுகள்:
(இட்லரியம், சாணக்கியம், சங்கராச்சாரியம்)

"ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தால், அதை மக்கள் மெய்யென்று நம்பி விடுவார்கள்" – என்பது வேதக் காலத்திலிருந்து இன்று வரையிலுள்ள பார்ப்பனீயக் கோட்பாடு. இதைத்தான் ஆரியத் தலைவன் இட்லர் கடைப்பிடித்து, உலகத்தையே தன்வயப் படுத்தும் பேராசை கொண்டு, அன்றிருந்த செருமானிய யூதர்களை இலக்கக் கணக்கில் கொன்று அழித்து, உலகத்தையே தன்வயப்படுத்த எண்ணி, இறுதியில் தற் கொலை செய்து கொண்டு அழிந்து, குருதிக்கறை படிந்த வரலாற்றைத் தனதாக்கிக் கொண்டான்.

"தப்பித் தவறி ஆட்சிக்கு வந்து விடுகிற பார்ப்பான்,

தனக்கு இருக்கிற அனைத்து விளம்பர அதிகார விரிவாக்க வாய்ப்புகளையும் கருவிகளையும் பயன்படுத்திக் கொண்டு, தன்னை எல்லாரும் நம்பிப் பின்பற்றத் தக்க 'புனிதனாக'வும் வல்லவனாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும்" – என்பது சாணக்கியம். இதைத்தான் அன்றைய சாணக்கியன் முதல் இக்கால இந்திரா, இராசீவ் வரை, சூழ்ச்சியாகக் கடைப் பிடித்துத் தங்களை உலகத்திற்கே நல்லவர்களாகவும் மக்கள் தலைவர்களாகவும் வெளிச்சம் போட்டுக் காட்டிப் பச்சைப் பார்ப்பனீயத்தை இந்தியாவிலும் பிற உலக நாடுகளிலும் பரவலாக வலுப்படுத்திக் கொண்டு சென்றார்கள்.

"வேதமதத்தை(இக்கால் இந்து மதத்தை)க் கொண்டு, மக்களை அனைத்து வகையிலும் கவர்ந்து வயப்படுத்தி, மதி மயங்கச் செய்து, தன்னை நடமாடும் தெய்வ நிலைக்குப் பார்ப்பான் உயர்த்திக் கொள்ள வேண்டும்" – என்பது சங்கராச்சாரியம்! இதைப் பயன்படுத்திக் கொண்டுதான் ஆதி சங்கராச்சாரியன் முதல், காஞ்சியிலுள்ள கழிசடைப் பிறங்கடைப் பார்ப்பனர்கள் வரை, தூய அறநெறி சான்ற சமணத்தையும் பௌத்தத்தையும் வேரறுத்துத் தங்கள் கைக் கருவிகளான நான்கு வேத, ஆறு சாத்திர, பதினெண் புராணங்களையும் இராமாயண, பாரத இதிகாசங்களையும் மக்கள் மண்டையில் ஆணி அறைந்தது போல் ஆழ அடித்து, அவர்களை மூளை வெளுப்புச் செய்து, அறிவியல் வளர்ச்சி பெற்ற நிலையிலும், இந்து மதம் என்னும் ஆரிய வேத மதத்தைப் பிற அறிவுக் கொள்கைகளால் அசைக்க முடியாமல் வேரூன்றச் செய்து, அறிவியலையும் பொருளற்ற புரையியலாக்கி வருகிறார்கள்.

இம் மூவகைப் பார்ப்பனீயக் கோட்பாடுகளைப் பயன் படுத்தித்தான், பார்ப்பனீயத்தை இந்தியாவில் மக்களின் நாடி நரம்புகளில் எல்லாம் பாய்ச்சி, எல்லா வகையிலும் அரசியல், பொருளியல், குமுகவியல் குற்றவாளிகளான இந்திராவையும், இராசீவையும் உலகத் தலைவர்களாக்கி,

அவர்களைப் பிடித்து மக்கள் தொங்கிக் கொண்டிருக்கும் படி செய்து கொண்டிருக்கிறார்கள், பார்ப்பனர்கள்.

**இராசீவின் மறைவும், பார்ப்பனீயப்
பதற்ற ஆரவாரங்களும்!**

நாம் எதிர்பார்த்தவாறு, இராசீவின் முடிவு அவர் அன்னையைப் போலவே கொடும் அவலத்தில் முடிந்தது. உயிர் போவது வேறு; அதைப் பிறர் போக்குவது என்பது வேறு. தாய்க்கும் பிள்ளைக்கும் அவர்களின் உடல்களைச் சிதைத்து உயிர் வெளியேற்றப்பட்டது. வழக்கம் போல் சிதைந்த உடலைத் தூக்கி வைத்துக் கொண்டு, ‘புனித’ நாடகம் போட்டு, நாட்டு மக்களிடத்திலும், உலக நாடுக ளிடத்திலும் பெருத்த ஆரவார விளம்பரத்தையும், இரக்கத் தையும், கட்டியங்கூறிப் ‘புண்ணிய’ வரலாறு எழுதி விட்டனர், ஆரியப் பார்ப்பனர்.

தேசியப் பொருளியல் மதிப்பை அறியாமல், வழக்கம் போல் அவர் அன்னைக்குச் செய்தவாறு இலக்கம் இலக்க மாக மக்களின் வரிப்பணத்தைச் செலவிட்டு, அவரின் சிதைவுற்ற உடலுக்குப் ‘புனித’ நீராட்டு, சந்தன நெய் எரி யூட்டு, சாம்பல் ஊர்வலம், ‘புனித’ ஆற்றுநீர்க் கரைசல், பனிமலைத் தெளிப்பு முதலிய மதச் சடங்குகளுடன், அரிய பெரிய உலகத் தலைமைக்கு உயர்த்திப் பாடித் தெள்ளேனம் கொட்டிவிட்டனர், அவரின் பின்பற்றிகளும், அரசியல் ஊதிய அதிகாரிகளும், குடும்பத்தினரும்! பார்ப்பான் இறந்தால், அவனைத் தேவனாக்கித் தெய்வம் ஆக்கி ஊர்ப் பணத்தை உலா வரத் தாராளமாகச் செலவழித்து, நெருப் பிலும் நீரிலும் கொட்டி விடுகின்றனர், பூணூல் திருமேனிகள். கேட்பதற்குப் புலனறியா வாயில்லாப் பூச்சிகளான இந்திய நாட்டுப் பேதை மக்களிடம், இராசீவ் போன்ற அரசியல் குற்றவாளிகளையும்(Political culprit) பொருளியல் எத்தர்க ளையும், ஏய்ப்பர்களையும்(Economical Fraud), குமுகாயப்

போக்கிரிகளையும் (Social Rogue) பார்ப்பான் என்கிற ஒரே காரணத்துக்காக அவன் மன, அறிவுக் குறும்புச் செயல்களை அடியோடு மறைத்து மண்ணிட்டு மூடி, சமசுக்கிருத வேத மந்திரங்களை – உரக்கக் கத்தி மேலுக்குத் தூக்கி, வானுக்கு உயர்த்தி, வாழ்த்துப் பாடி முடித்துவிட்டனர். இந்த வகையில் பார்ப்பனப் பெருச்சாளிகளும், அரசியல் அரம்பர்களும், மதவியல் சூதர்களும் மக்களால் மலர் மாலையிட்டு வணங்கத்தக்க உருவங்களாகி விடுகின்றனர்.

இராசீவ் வெடித்துச் சிதறிய நாள் முதல், ஒரு கிழமையாகப் பார்ப்பன நச்சுப் பாம்புகள் தொலைக்காட்சி, வானொலி எங்கும் படமெடுத்தாடின. அவர் இறப்பைச் சாக்கிட்டு, ஏழு நாள்கள் துயர 'முகாரி' பாடின, தொலைக் காட்சியும் வானொலியும்! ஒரு கிழமை ஒதுக்கீட்டை நெருக்கடிநிலைக் காலம் போல் கருதி, பார்ப்பனர்கள் தங்கள் விருப்பம் போல் நன்கு பயன்படுத்திக் கொண்டு, இவ்விந்திய நாட்டைச் சார்ந்த ஏமாளி எவனும் 'ஏன்' 'எதற்கு' என்று கேட்காத வகையில், தங்களின் ***'வேத வித்யா சாகர, சர்வ வியாபக, சத்துவ சனாதன சம்ப்ரதாய சம்ரக்ஷணைகளை'*** வலுப்படுத்திக் கொள்ள, தங்களின் வம்சாசாதனசம்ப் பத்துகளான பாகவதப் ப்ரஸங்கங்கள், பக்தி பஜன்கள், பகவத் ஸங்கீத நாமார்த்தனங்கள், வேத, புராண, இதிகாஸ ஆலாபனைகள், சத் கதா காலக்ஷேபங்கள், ஆதிஸங்க்ர அதிமோக்ஷ ஸ்தோத்திரங்கள், சமஸ்கிருத வேத மந்த்ர பாராயணங்கள், ஸமத்கார சங்கீத தாள நர்த்தனங்கள் (தூய தமிழ் அன்பர்கள் பொறுத்துக் கொள்க! அவற்றை அவாள் மொழியிலேயே சொல்வதே 'ஸ்ரேஷ்டம்' (!) என்பதால் இவ்வாறு எழுதப் பெற்றன என்க) — முதலிய பச்சைப் பார்ப்பனக் கூத்தடிப்புகளை இந்த ஏழு இருண்ட நாள்களிலும் கேட்டு, நாம் 'பாரத' இந்தியாவில்தான் பார்ப்பன ஆட்சியில்தான் இன்னமும் இருக்கிறோம் என்பதை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுவதாயிற்று!

இராசீவின் சாத்துயர் நேரத்தை, மக்களிடத்தில் மூடத் தனத்தையும், அறியாமையையும் வளர்க்க நன்கு பயன் படுத்திக் கொண்டனர், அந்தக் கெட்டிக்காரப் பார்ப்பனப் பழவேக்காடுகள்! இந்தச் சூழ்நிலை, பார்ப்பனக் குஞ்சு குளுவான்களுக்கெல்லாம் பெரிய மனத்தாக்கத்தையும் உடல் நடுக்கத்தையும் ஏற்படுத்தியதில் வியப்பில்லை. சென்னைத் தொலைக்காட்சியில், நாளுக்கொரு வகை நகைகளும் உடைக ளும் அணிந்து, திரைப்பட நடிகையைப் போலச் செய்தி படிக்கும் பார்ப்பனப் பெண் ஒருத்தி, இராசீவின் மறைவால், கைம்பெண் கோலமே பூண்டு காட்சியளித்ததும், பார்ப்பனச் செய்தி படிப்பாளர் ஒருவர், தாடிமீசையுடன் கருப்பாடை அணிந்து தோற்றங் காட்டியதும் அத்தாக்கத்தினால் ஏற்பட்ட மாற்றங்களே!

இவர்கள்தாம் தம் அரசியல் தலைவரின் எதிர்பாராத மறைவால் தங்கள் துயரங்களையும் ஆற்றாமைகளையும் இவ்வாறு வெளிச்சம் போட்டுக் காட்டினார்கள் என்றால், நம் திராவிட இயக்கத் தலைவர்களும் 'மே 21-ஆம் நாளன்று நம் தமிழ் மண்ணில் சிந்தப்பட்ட அரத்தம் இந்தியத் திரு (டர்!)நாட்டின் ஒளி மிகுந்த ஓர் இளந்தலைவனின் அரத்த மன்றோ' என்றும், 'இவரைக் குண்டு வெடிப்பால் சாய்த்த செயலைக் காட்டு விலங்காண்டித்தனம் என்பதா? கோழைக ளின் வெறிச்செயுல் என்பதா? – இழி குணத்தின் வெளிப் பாடு என்பதா? இரை தேடிய பதவிப் பசியின் பகை தீர்க்கும் படலம் என்பதா? இந்திய நாட்டு அரசியலில் குழப்பம் ஏற்படுத்த எங்கிருந்தோ வன்கணாளர் ஏவி விட்ட வஞ்சகம் சூது, சூழ்ச்சி என்பதா?' என்றும், 'எதுவாயினும், அது தமிழ் மண்ணுக்கு நேர்ந்த களங்கம்; எளிதில் துடைத்தெறிய முடியாத வெட்கக்கேடு' என்றும் திரைப்பட 'வசனம்' பேசி, நீலிக்கண்ணீர் வடித்தனர். என்னே தமிழர்களின் – தன்மானக் கேடு! மாற்றானுக்கு வால் பிடிக்கும் வல்லடிமைத்தனம்!

## இராசீவ் ஓர் ஊழல் பேர்வழி!

இராசீவ் தம் தாயார் இந்திராவைப் போலவே உலகறிந்த அரசியல், பொருளியல் ஊழல் மன்னராகவே வாழ்ந்திருப்பதை உலகமே அறியும். மேற்கு செருமனி யிடமிருந்து போர்க்கருவிகள் வாங்கிய வகையில் பேர்பாக்சு (Fare Fax) முகவாண்மை நிறுவனத்துடனும், சுவீடன் நாட்டுத் தகரிகள் (டாங்கிகள்) வாங்கிய பேரத்தில் அங்குள்ள போபார்சு நிறுவனத்துடனும், சப்பான் நாட்டிலிருந்து நீர் மூழ்கிக் கப்பல் வாங்கிய பேரத்திலும் இராசீவ் அடித்த கோடிக் கணக்கான உருபாக் கொள்ளைகள் மிகப்பெரும் பெயர் பெற்றவையல்லவா?

இராசீவின் அன்னை இந்திரா செய்த முந்திரா ஊழலை, அவர் கணவரும் இராசீவின் தந்தையும் ஆகிய பெரோசு காந்தியே அம்பலப்படுத்தினார். அவரினும் மேலாக, ‘தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்’ என்னும் பழமொழியை, இராசீவ் இறக்குமதி உரிமம் வழங்குவதில் செய்த ஊழல், மாருதி சிற்றுந்து ஊழல் – முதலியவை மெய்ப்பித்துக் காட்டின. இந்திரா செய்த நகர் வாலா கொலை போன்ற பன்னூற்றுக் கணக்கான கொலைக ளுக்கு மேலும், இராசீவ், அவர் அன்னை கொலை செய்யப் பட்ட 1984 அக். 31-இலும், அதற்குப் பின்னும் திட்டமிட்டுப் பல நூறு கொலைகளைச் செய்ய ஆட்களை ஏவிவிட்டார். அக்கால கட்டத்தில் தில்லியில் மட்டும் ஏறத்தாழ மூவாயிரம் பேர்களுக்கு மேல் கொலை செய்யப்பட்டனர். இரண்டா யிரத்துக்கும் மேற்பட்ட வண்டிகள் கொளுத்தப்பட்டன. 2174 வீடுகள், தொழிற்சாலைகள், கடைகளுக்குத் தீயிடப் பெற்றது. ஏறத்தாழ 300 கோடிக்கும் மேற்பட்ட சொத்துகள் அழிக்கப் பட்டன. இவையெல்லாம் இந்திராவின் கொலைக்குப் பின் மக்கள் எழுச்சிக்கிடையில் இயல்பாக நேர்ந்தவையல்ல; திட்டமிட்டு நிகழ்த்தப் பெற்றவை. இவற்றை இராசீவின்

'அரசியல் திருவிளையாடல்கள்' என்றே சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறிவிடலாம்.

## பார்ப்பனரின் பொய்ப் புகழ்ச்சிகள்!

இத்தனை அழிம்புகளுக்கும் இன்னும் எத்தனையெத் தனையோ தொடர் ஊழல்களுக்கும் காரணமான இராசீ வைத்தான், அவர் மறைவு நாளில், உலகத் தலைவர், பாரதத்தை மேம்படுத்த வந்த மாபெரும் ஆற்றல் வாய்ந்தவர், இந்தியாவின் அருமை பெருமைகளை உலகளவில் உயர்த்திய பிறவித் தலைவர் என்றெல்லாம் அளவுக்கு மீறிப் புகழ்ந்து பாராட்டித் தங்கள் பதவிப் பேராசைகளுக்கு உயர்ச்சி காட்டிக் கொண்டனர். 'இராசீவ் இல்லையானால், ஏதோ இந்தியாவே அழிந்து விடுவது போல்' ஒப்பாரி முழக்கினர்.

ஒரு நாட்டின் தலைமையமைச்சராக யார் வந்து அமர்ந்தாலும், அவர் பதவியில் உள்ளபோது மறைந்தால், பிற உலக நாடுகளின் தலைவர்களில் பெரும்பாலாரும் வந்து இரக்கம் தெரிவிக்கவும், அவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு இரங்கல் உரை ஆற்றவுமே செய்வர். பொதுவாக நடந்த இந்நடைமுறையை, ஏதோ இராசீவுக்காக நடந்த பெருமைக்குரிய சிறப்பு நடைமுறையாகவே வண்ணித்து வானளாவ இராசீவைப் புகழ்ந்து தள்ளினர், இங்குள்ள பார்ப்பனர்களும் அவர்களின் அடிவருடிகளும்!

இந்த வகையில் இராசீவின் மறைவை, அவர் அன்னை இந்திராவை விடவும், அவர் பாட்டனார் நேருவை விடவும், இன்னும் உலக நாடுகள் அனைத்திலும் உள்ள தலைவர்களுக் கெல்லாம் மேம்பட்ட தலைவராகவும் காட்டியதும், இந்தியாவுக்கு இவர், பிறர் யாருமே ஆற்றவொண்ணாத பெருந்தொண்டும், ஈகமும் செய்தது போல மிகைப்படுத்தி விளம்பரம் செய்ததும், அண்மையில் நடைபெறவிருந்த தேர்தல் ஊதியத்திற்காகவும், அவர் மேல் படர்ந்திருந்த

உலகப் பெரும் ஊழலை மறைப்பதற்காகவும், இந்தியாவில் பார்ப்பனத் தலைமையை நிலைப்படுத்திக் கொள்வதற் காகவும், இங்குள்ள பார்ப்பனத் தலைவர்களும், இந்திரா பேராய அரசியல் தலைவர்களும் கையாண்ட தந்திர உத்திகளே ஆகும்.

இராசீவைக் குண்டு வெடித்து அழிவுறச் செய்தவர்கள், இவ்வகையில் மிகப் பெரும் அறிவாளிகளும், ஈகிகளும், மக்கள் நலம் கருதியவர்களுமே ஆவர். இல்லெனில், இந்தியா வில் வேறு எவருக்குமே இல்லாத அளவில் ஓர் ஆண்டுக்கு உருவா இருபது கோடிச் செலவில் பாதுகாப்பு வளையத் திற்குள் வாழ்ந்த இம் மிகப்பெரும் ஊழல் மன்னனைத் தன்னலப் பித்தனை, வேறெவரும் வேறெவ் வகையிலும் முடிவுறும்படி செய்திருக்கவே இயலாது.

**இந்திய அரசின் இழிதன்மைகளும், ஆரவாரங்களும் ஊழல்களும்:**

இந்திய அரசியலைப் பொறுத்த வரையில், ஆட்சி அதிகார நிலையில் ஏற்பட்டிருக்கும் கையூட்டு, கொள்ளை யடிப்பு, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், ஆட்சித் தலைமை, அதிகாரத் தலைமை ஆகியவை மக்களை விட்டு விலகி இயங்குவது, செருக்கும் தன்மூப்பும் கொண்ட வல்லதிகாரப் போக்கு, அறிஞர்களை மதியாத நிலைமை, அரசுப் பணங்களில் ஆட்சியதிகாரத்தில் உள்ளவர்கள் துணிந்து கை வைப்பது, அவற்றைக் கையாடுவது, ஆடம்பர ஆரவாரத்தனமாக அதிகாரத்தில் உள்ளவர்கள் வாழ்வது, தங்கள் சொந்தப் பாதுகாப்புக்கென அரசுப் பணத்தைப் பெரும் அளவில் செலவழிப்பது, மக்கள் வரிப்பணத்தைத் தங்கள் சொந்தப் பணமாகக் கருதி ஊர் உலா, உலக உலா வருவது, தங்கள் சொந்தச் சாய்காலையும் பெருமையையும் புகழையும், உலக நாடுகளிடம் ஒரு போலி மதிப்பையும் தேடிக் கொள்ள, ஏழைமை நாடாக உள்ள இந்தியாவில்

உலக விழாக்களையும், உலக விளையாட்டுகளையும் பல கோடி உருவாக்களை வாரியிரைத்துக் கொண்டாடுவது, கலை, பண்பாட்டுப் பரிமாற்ற விழாக்கள், வேடிக்கைகள் என்று வேற்று நாடுகளில் போய் விழாக்கள், வெட்டி நிகழ்ச்சிகளை நடத்துவது, தேர்தலில் 100 கோடி முதல் 500 கோடி வரை, தரகு முதலாளிகளும், இங்குள்ள கொள்ளை முதலாளிகளும் ஆட்சியினரைக் கைகளில் போட்டுக் கொள்ளக் கறுப்புப் பணங்களைச் செலவிடுவது, தேர்தலில் திருட்டு தில்லுமுல்லு அரம்பத்தனங்களைக் கடைப் பிடிப்பது, கள்ள ஒப்போலைகளைப் போடச் செய்வது,

— தங்களுக்குப் பிடிக்காத — தங்களுடன் ஒத்துப் போகாத — இனத்தை — பிற கட்சித் தலைவர்களைத் தீர்த்துக் கட்டுவது, கீழ் இறக்குவது, அரசியல் களத்தை விட்டு அப்புறப்படுத்துவது, தங்களின் அரசியல் செயல்பாடுகளை — தங்களைப் பல வகையான விளம்பர உத்திகளைக் கையாண்டும், கோடி கோடியாக அரசுப் பணத்தைச் செலவழித்தும் — பொய்யாகவும், புனைவாகவும் பெரும் அளவில் விளம்பரப்படுத்திக் கொள்வது, அந்த வகையில் அரசின் தலையாய விளம்பரக் கருவிகளான வானொலி, தொலைக்காட்சி பிறவற்றைத் தங்களின் தனி நலத்துக்காகத் தாங்களே பயன்படுத்திக் கொள்வது, அதே போல் பிற அரசியல் தலைவர்கள் அவற்றால் விளம்பரம் பெறுவதைத் தடுப்பது, தங்களுக்கென்று குண்டு தொளைக்காத சட்டை, குண்டு தொளைக்காத இயங்கிகள், குண்டு தொளைக்காத மேடைகள் முதலிய பாசிச, முதலாளிய நாட்டுப் பாதுகாப்பு முறைகளைக் கையாள்வது, தங்களின் பாதுகாப்புக்கெனப் பல படிநிலைகளையும் வளையங்களையும் கொண்ட காவல் கட்டுப்பாடுகளையும், ஒற்றுக் காவலர்களையும் பல கோடி உருவாக்கள் செலவில் அமைத்துக் கொள்வது, நெருக்கடி நிலைகளை அறிவிப்பது, அவ்வாறு அறிவிக்காமலேயே அடக்குமுறைக் கறுப்புச் சட்டங்களைப் போடுவது, கொடிய வன்முறையான

நடைமுறைகளைக் கையாள்வது, சட்டமன்ற, நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் மாநில, அனைத்திந்திய எதிர்க்கட்சித் தலைவர்களையும் பெருவிலை கொடுத்து வாங்குவது, தங்களுக்கு மாறான — அடங்கிப் போகாத — மாநில அரசுகளைக் கவிழ்ப்பது, ஆளுநர்களை மாற்று வது, திரும்பப் பெறுவது, ஒரு புரட்சி அமைப்பைக் கொண்டே இன்னொரு புரட்சி அமைப்பை அழிப்பது இன்னோரன்ன அரசியலுக்கும் அறிவியலுக்கும் பொருந்தாத தில்லு முல்லு, ஏமாற்றுத் தகிடுதத்தப் பித்தலாட்டப் புனை சுருட்டு முறைகள் எல்லாம், இந்திரா தலைமையமைச்ச ராகப் பதவியேற்ற காலத்திலிருந்து தான் தொடங்கின என்பதைச் சிறிது அரசியலறிவு கொண்டவர்களும் விளங் கிக் கொள்ளாமற் போக முடியாது; மேனிலை அரசியல் அறிவு உள்ளவர்களும் மறுக்க முடியாது. அரசியலுக்கே மாறுபட்ட, சூதாட்டத்தனமான, சூழ்ச்சி நிறைந்த, கரவான இந்திராவின் இத் தவறான கொடுமையான நடைமுறைக ளுக்கெல்லாம் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றை யெல்லாம் இங்கெடுத்துக் கூறுவதானால், இவ்வேடு இடங்கொள்ளாது. எடுத்துக்காட்டாக, அவர் காலத்தின் தாறுமாறான நடவடிக்கைகளில் ஒன்றிரண்டை மட்டும் காட்டுவோம்.

## இந்திரா செய்த கொடுமைகள்!

*1984-இல் இந்திராவின் தேர்தல் விளம்பரத்திற்காக மட்டும், அவரின் தொகுதி ஒன்றிற்கு 10 முதல் 20 இலக்கம் உருவா வரை செலவழிக்கப்பட்டது. அவ்வகையில் மொத்தம் ஏறத்தாழ 100 கோடி உருவாவைச் செலவிட்டார். இத் தொகை இந்திய முதலாளிகளிடமிருந்து பெற்ற கருப்புப் பணம். இதற்குக் கைம்மாறாக, அவர் ஆட்சிக்கு வந்ததும் பெரும் முதலாளிகள் கொள்ளை ஊதியம் பெற, அரசியல் தடுப்புக் கதவுகளை அவர்களுக்குத் தாராளமாகத் திறந்து விட்டார், இந்திரா.*

இந்திரா, 1966 முதல் 77 வரையில் 11 ஆண்டுகளும், மீண்டும் 80 முதல் 84 வரை 5 ஆண்டுகளும், ஆக ஏறத்தாழ 16 ஆண்டுகளும் அதிகாரத்தில் இருந்தார். 1975 – சூன் 26 முதல் 1977 பிப்பிரவரி முடிய நெருக்கடி நிலையை இந்திரா அறிவித்திருந்தார். இக் காலகட்டத்தில் அவர் ஓர் அனைத்ததிகாரியை(சர்வாதிகாரியை)ப் போலவே நடந்து கொண்டார். அக்கால் நடந்த அரசியல் அட்டூழியங்களைப் போல இந்திய அரசியலில் வேறெந்தக் காலத்திலும், வேறெவரும் மக்களுக்குச் செய்யவில்லை. ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் நாடு முழுவதிலும் சிறை வைக்கப் பெற்றனர். தேசாய், செயப்பிரகாசு நாராயண் போன்ற பெரும் பெருந் தலைவர்கள் எல்லாரும் சிறைக்குள்ளே தள்ளப்பெற்றனர். ஏறத்தாழ நாடு முழுவதிலும் உள்ள எல்லாத் தீவிர எதிர்க்கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் சிறைக்குள் ஓராண்டுக் காலம் இந்நூலாசிரியர் உள்பட, வாடி வதங்கினர். பேச்சுரிமை, எழுத்துரிமை, செய்தித்தாள் உரிமைகள் முதலிய மக்கள் நல உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டுவிட்டன. மக்களில் எவரும் எது பற்றியும் 'ஏன்' 'எதற்கு' என்று கேட்கவும் அஞ்சினர். ஒவ்வொரு நாளும் மக்கள் 'வெருக்' 'வெருக்' என்று அஞ்சி நடுங்கிச் சாகாமல் செத்துக் கொண்டிருந்தனர்.

அந்நெருக்கடி நிலைக் காலத்திலும், அவர் தலைமை அமைச்சராகப் பொறுப்பிலிருந்த பிற காலகட்டத்திலும் இந்தியாவின் அரசியல், பொருளியல், குமுகவியல், அறவியல்(நீதியியல்), ஆட்சியியல், நாடாளுமன்ற, சட்ட மன்ற நடவடிக்கைகள் முதலிய அனைத்தும் சீர்குலைந்தன. தாறுமாறாகச் சிதறுண்டன; முன்னேற்றம் தடைப்பட்டது. அரசியலில் குற்றவாளிகளும், கொடுமைக்காரர்களும் கொள்ளையரும், திருடர்களும் உட்புகுந்தனர். ஆட்சி யாளர்களோடு கைகோத்துக் கொண்டனர்.

— கோடி கோடியாய்க் கொள்ளை அடிப்பவர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர்கள், நடுவண் அமைச்சர்கள் ஆனார்கள். அல்லது ஆனபின் கொள்ளையர்களாக மாறினார்கள்.

இலக்கம் இலக்கமாய்க் கொள்ளை அடிப்பவர்கள், அல்லது அடிக்க விரும்பியவர்கள் சட்டமன்றங்களைக் கைப்பற்றினார்கள். உறுப்பினர்களாக, மாநில அமைச்சர்களாகப் பதவியேற்றார்கள்.

ஆயிரம் ஆயிரமாகக் கொள்ளை அடிப்பவர்கள், அல்லது அவ்வாறு விரும்பியவர்கள் நகராட்சி உறுப்பினர்கள், அல்லது ஒன்றியச் செயலாளர்களாகப் பதவி யேற்றார்கள்.

மொத்தத்தில் அரசியலை ஒரு வருவாய்க்குரிய கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்த நிலையெல்லாம் இந்திரா தொடங்கி வைத்து, இராசீவ் விரிவாக்கம் செய்த முறைகளாக ஆகிவிட்டன.

உலக வைப்பகக் கணக்குப்படி பொருளியலில் இந்திரா ஆட்சிக்கு வந்த 1966-இல், இந்தியா உலகப் பொருளியல் வளர்ச்சியில் 85-ஆவது இடத்தில் இருந்தது. 1977-இல் அவர் 11 ஆண்டுகள் இந்திய அரசியலில் தலைமையேற்ற பின், அஃதாவது அவர் முதல் முறை பதவியை விட்டு வெளியேற்றப்படுகையில், அது 111-ஆவது இடத்திற்கு வந்து, அதன் பின் அது கடைசி இடத்திற்கு வந்தது.

## இந்திரா ஆட்சியில் கொள்ளையடிப்புகள்!

இந்திரா ஆட்சியில் ஆசிய விளையாட்டு 1982 நவம்பரில் நடந்தது. அதில் பல கோடி உருவாக்கள் அரசின் பல்வேறு தரப்பினரால் கொள்ளையடிக்கப்பட்டன. தொடக்கத்தில் அதற்கு 70 கோடி செலவாகும் – செலவு ஆகலாம் — என்று மதிப்பிடப் பெற்றது. பிறகு 150 கோடி ஒதுக்கப்பட்டது. இறுதியில் அதற்கு மக்கள் வரிப்பணத்தில்

*1700* கோடி செலவானதாகக் கணக்குக் காட்டினர். இந்த வகையில் நடந்த தில்லு முல்லுகளும், ஊழல்களும் ஏராளம். இது பற்றியே ஒரு தனிக் கட்டுரை எழுதப்பட வேண்டும். இது பற்றியெல்லாம் இந்த நாட்டின் ஏழை மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் எதுவும் தெரிய வாய்ப்பில்லை. அதை அவர்கள் தெரிந்து கொள்வதையும் அரசு விரும்புவதில்லை. எப்பொழுதும் இது போன்ற ஊழல்கள் அரசினரால் கரவாக, வலக்காரமாகத் திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன. இவ்வனைத்துச் செயல்களுக்கும் இந்திராதான் வித்திட்டவர். இந்திய அரசியலையே அவர் நாற அடித்துவிட்டார். அதன் தீ நாற்றத்தைப் பல நூறு மடங்குகளாகப் பெருக்கிவிட்டவர் அவரின் அரசியல் பிறங்கடை(வாரிசு) ஆன இராசீவே! எனவே இராசீவை நினைக்கும் பொழுதெல்லாம் அவரின் அளவு மீறிய, தாறுமாறான வளர்ச்சிக்கு அடிப்படையான அவருடைய தாயை – இந்திராவை நாம் நினைத்துத்தான் ஆகவேண்டும்.

## இராசீவ் ஒரு முள்மரம்!

இனி, இராசீவின் மறைவு குறித்த செய்திக்கு நாம் வருவோம். அவரின் மறைவு, காலத்தால் தேவையானது. இனிமேலும் அம் முள்மரம் இந்தியாவில் வளர்ச்சி பெற்றால் பார்த்தீனியம் என்னும் நச்சுச் செடி பரவியது போல நாடெல்லாம் பரவியிருக்கும். நல்லவேளை, அவர் மறைவுற்றது நாட்டுக்கு நல்லதாக — குறிப்பாக நந் தமிழினத்திற்கு மிகவும் நல்லதாகப் போயிற்று. பெரும்பாலும் தீமைகள், கொடுமைகள் தாமாக அழிவதில்லை. நல்லவை நல்ல சூழல் இருந்தால்தான் நிலைத்து நிற்கும். ஆனால் தீமைகள் அவ்வாறில்லை. நல்ல சூழல் இல்லையானாலும் அவை வளர்ந்து செழிக்கும். நெல்லுக்கு நல்ல வயலும், நல்ல எருவும், நீரும், பாதுகாப்பும், கண்காணிப்பும் தேவை. ஆனால் புல்லுக்கு அவை தேவையில்லை. எந்தச் சூழலிலும் அவை வளரும்; நிலைத்து நிற்கும். அது போல்தான்

மாந்தரிலும் தீயவர்கள், கொடுமையானவர்கள், முட்செடிகள், புதர்கள், புற்கள் போல் மளமளவென்று வளர்ச்சி பெறுவார்கள். மற்றவர்களை வளர விடாமல் தாமே வளர்ந்து நிற்பார்கள்.

இராசீவும் அவருடைய அன்னையும் முள்மரமும், முட்புதரும், புற்களையும் போன்றவர்களே! அவர்கள் தாமாகவே, காலம் வந்து மடிவதில்லை. அழிக்கப்பட வேண்டிய தீமைகள் போல், இவர்களும் அழிக்கப்பட்டுத் தான் மடிகிறார்கள். இஃது இயற்கையும் வரலாறும் ஆகும்.

## இந்திராவும் இராசீவும் தமிழின அழிப்பாளர்கள்!

இந்திராவாலும், இராசீவாலும் தமிழினம் அழிந்தது போல் வேறு எந்த அரசியல் தலைவராலும் அழிபட வில்லை. அதுவும் இவர்கள் திட்டமிட்டே தமிழினத்தை அழித்தொழிக்க முற்பட்டார்கள். அதன் வளர்ச்சியைத் தடுத்தார்கள். தமிழகத்திலும் சரி, தமிழீழத்திலும் சரி, இவர்களால் தமிழினம் அழிக்கப்பட்டே வந்தது. பார்ப் பனர்களே இவர்களால் பெரிதும் வளர்ச்சி பெற்றார்கள். பார்ப்பனீயம் இவர்களால் மிகவும் தழைத்தோங்கி வலுப் பெற்று வந்தது. இதில் யாரும் கருத்து வேறுபாடு கொள்ளவோ, காட்டவோ முடியாது. பொத்தாம் பொதுவில், இவர்கள் நாட்டுக்கு நல்லது செய்தார்கள் என்று, இவர்களால் பெரிதும் நன்மைகள் பெற்ற பார்ப்பனர்களும், முதலாளிகளும், நம் இனத்து இரண்டகர்களும், வஞ்சகர்களும், காட்டிக் கொடுப் பான்களும் கூறுவார்களே யொழிய, வேறு தனித் தேசிய இனத்தவர்கள் எவரும் கூற முன்வர மாட்டார்கள். மொத்தத்தில், இவ்விரு தலைவர்களாலும், தமிழினத்தவர்கள், பஞ்சாபி இனத்தவர்கள், அசாமியர், காசுமீரிகள், நாகாலாந் தியர், மிசோராமியர், வங்காளியர் போன்ற தேசிய இனத் தவர்கள் பெரிதும் வலுக்குன்றினர். நேரு காலத்தில் பார்ப் பனீய வளர்ச்சிக்கும், பிற தேசிய இனங்களின் தளர்ச்சிக்கும்

வித்திடப் பெற்றது. அவரின் மகளான இந்திராவின் காலத்தில் அவற்றிற்கு எருவும் நீரும் இடப்பெற்றன. இராசீவ் காலத்திலோ அவை செடியாகி மரமாக வளர்க்கப் பெற்றன. இராசீவ் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க விடப் பெற்றிருந்தால், அந் நச்சு மரங்கள் காய்த்தும் பழுத்தும் அவர் இனத்திற்குப் பயனும், பிற இனங்களுக்கு அழிவும் நேர்ந்திருக்கும் என்பதில் ஐயமே இல்லை.

இராசீவைப் பற்றி உயர்வாக எண்ணி இறுமாந்து கொண்டுள்ளவர்கள், நம் *'தமிழ் நிலம்'* இதழின் 147ஆம் எண்ணுள்ள வெளியீட்டில் உள்ள இராசீவ் என்னும் **கைதேர்ந்த அரசியல் நடிகனின் உள்ளும் புறமும்** என்னும் கட்டுரையை ஊன்றிப் படித்து உண்மையை உணர வேண்டுகிறோம்.

## இராசீவால் ஏற்பட்ட இலங்கைத் தமிழின அழிவுகள்:

இவர், தமிழீழ விடுதலைப் போரில் குறுக்கீடாக நடந்து கொண்ட அடாவடித்தனங்களும், தமிழின அழிப்பு முயற்சிகளும் தமிழின மக்கள் இவ்வுலகில் உள்ளவரை நினைவில் இருத்தி வைத்துக் கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகளாகும். 1987-ஆம் ஆண்டு இறுதியில் அவர் சிங்கள அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தமும், அவர்களுக்குத் துணையாகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், **இந்திய அமைதி காக்கும் படை** (Indian Peace Keeping Force) என்னும் பெயரில் இவர் முதன் முதல் யாழ்ப்பாணத்தில் இறக்கிய 28,000 இந்தியப் படை வீரர்களும், அவர்களுக்குப் பின்னர் படிப்படியாக அனுப்பிய ஏறத்தாழ ஒன்றரை இலக்கம் படைவீரர்களும், ஈழத்தில் தமிழினத்திற்குச் செய்த பேரழிவுகளையும் இழிவுகளையும் இவ்வுலகம் அழியும் வரை தமிழினம் மறந்துவிட இயலாது. இலங்கையிலிருந்த ஏறத்தாழ 2 இலக்கம் இந்தியப் படைகளுக்காக ஆண்டுக்கு 15 ஆயிரம் கோடி உருவாவை இராசீவ் செலவழித்தார்.

இந்தியப் படையினர் இலங்கை செல்லாதிருந்த முன்னர், சிங்களப் படையினர் அங்கிருந்த தமிழர்களின் மேல் ஒரு நாளைக்கு 40, 50 முறைகள்தாம் குண்டு வீச்சு நடத்தி வந்தனர். ஆனால் அங்கு இராசீவால் அனுப்பி வைக்கப் பெற்ற இந்தியப் படையினர் ஒரு நாளைக்கு 500 முறைகளுக்கு மேல் குண்டு வீச்சுகளை நடத்தியுள்ளனர். இவற்றிலிருந்து இராசீவ் ஈழத் தமிழினத்தை அழிக்க எந்த அளவு தீவிரம் காட்டியிருக்கிறார் என்பதை இக்கால் சிந்தித்துப் பார்த்தால், அவரின் கொடுமை புலப்படும். இவரால் இக் காலகட்டத்தில் ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களும், இரண்டு இலக்கத்திற்கும் மேற்பட்ட தமிழினப் பொது மக்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர். பன்னூற்றுக் கணக்கான பெண்கள் சீரழித்துச் சிதைக்கப் பட்டுள்ளனர்; 5000 பேர்களுக்கு மேல் கைகால்களை இழந்து போயிருக்கின்றனர். ஓரிலக்கத்திற்கும் மேலான தமிழ் மக்களின் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன; மூவாயிரத்துக் கும் மேற்பட்ட இளைஞர்கள் சிறைப்படுத்தப்பட்டு உறுப்புச் சிதைவுகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் — என்றால் இவை தமிழினத்தை அழித்த செய்தியாகாதா என்று இன்றைக்கு இராசீவைக் கொண்டாடும் அரசியல் சூதர்கள் எண்ணிப் பார்க்கட்டும்.

இராசீவ், அன்றைய நிலையில் தமிழீழத்தைப் பொறுத்த அளவில், இலங்கையின் வல்லதிகாரத் தலைவரைப் போலவே நடந்து கொண்டார். அவர், தம் அமைதிப் படையென்னும் அரக்கர் படை அல்லது சாத்தானின் படையின் வழி, அங்குள்ள தமிழினத்தைப் படிப்படியாக அழிக்கத் தொடங்கிய அந்தக் கொடுமையை நாம் **தென்மொழி, தமிழ்நிலம்** ஆகிய இதழ்களின் வழியாக மிக வன்மையாகவும் கடுமையாகவும் கண்டித்து வந்தாலும், அவற்றின் தாக்கங்களை நம்மால் பொறுத்துக்கொள்ள முடியாமல், மனம் மிகவும் துயருற்றது.

## இராசீவுக்குப் பாடிய அறப்பாடல்!

அத்தகைய வெகுண்ட சூழலில் *'தென்மொழி'*யின், 88 மார்ச்சு, ஏப்ரல், சுவடி 24, ஓலை 3 — இதழில், அவர்மேல் ஓர் அறப்பா (சாவப்பாடல்) எழுதினோம். அப்பாடலைப் பலரும் மறந்திருக்கலாம். சிலர் நினைவில் வைத்திருக்கலாம். 'இட்ட சாவம் முட்டுக' என்னும் தலைப்பில் எழுதிய 36 வரிகள் கொண்ட பாடல் அது. இதழ்களைக் காத்து வைத்துள்ளவர்கள் அக்குறிப்பிட்ட இதழை எடுத்து இப்பொழுது பார்க்கக் கேட்டுக் கொள்கிறோம்.

அப்பாடல், 'முண்டையின் மகனே! முண்டையின் மகனே!' என்று தொடங்கி,

சிங்களக் கொலைஞன் செயவர்த் தனன்எனும்
வெங்கணன் விரித்த வலையினில் விழுந்து
செந்தமிழ் இனத்தைச் சீரழித் திடவே
முந்து'இரா சீவ்' — எனும் முண்டையின் மகனே!
.................................
யாழ்த்தமிழ் மக்களின் யாக்கைகள் எல்லாம்
போழ்த்துயிர் குடிக்கும் அரக்கப் பூதனே!

— என்று நடந்து,

நீயுநின் துணையும் நின்னிரு மக்களும்
ஏயுமிவ் வுலகத்து இருக்குநாள் தோறும்
எந்தமிழ் நல்லினத் தேற்றம் குலைதலால்
வெந்தழி யும்நாள் விரைந்துனக் கெய்துக!

— என்று பொங்கிப் புடைத்தெழுந்து,

இடும்பைப் பிறப்பே! ஏழிரு கோடிக்
குடும்பம் அழிக்கும் கொடியனே! நின்னைக்
கடும்புலி வரியெனச் சாவு கவ்வுக!
திடுமென நினையொரு தீச்சுழல் சூழ்க!
சூழ்ச்சியும் அரக்கமும் அதிகாரச் சூழலும்
வீழ்ச்சி யுறுக! நின்னுடல் வெடித்துச்

சுக்குநூ றாகச் சிதறுக! சூதனே!
திக்கிநா விழுக்க! நெஞ்சு தெறிக்க!

எந்தமிழ் இளையரும் ஏழைப் பெண்டிரும்
நொந்துயிர் துடிக்கையில் உளக்குலை நொய்ந்தே
இட்ட சாவங்கள் இணைந்து கூடி
முட்டுக நின்னுயிர்! மூளி, நீ யாகுக!

— என்று மின்னி, இடித்துச் சாவம் தந்து, உள்ளக்கனல் தணிகிறது. இப்பாடல் நடந்தியலும் நடுவில்,

தமிழினம் தகைக்கும் தருக்கனே! நின்குடி
அமிழுக! ஆங்கோர் அணுவின்றி அழிக!

— என்று, அழலும் நெஞ்சின் ஆர்ப்பு அடங்கிச் சுழலும் நினைவுடன் சூழ்ந்து நின்று,

தணலும்எம் நெஞ்சின் தவிப்பை
மணல்,நீர், தீ, வளி, வானம் — ஆற் றுகவே!

— என்று சான்றியம் வைத்துக் கூறிய கூற்றன்றோ, இராசீவுக்கும் அவர் கொடுமைகளுக்கும் கூற்றுவனாய் நின்றது! இலங்கைத் தமிழினத்தவர் மனத்துயரும், எம் மனத் தவிப்பும் இட்ட சாவம் எவ்வாறு முட்டியது, பார்த்தீர்களா? **உண்மையின் விளைவு அதுதான்! 'அரைசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற்றாவதும்'** அதுதான்!

இராசீவின் மறைவு உண்மையில் அவரின் வரலாறன்று! **'தென்மொழி'**யின் வரலாறு ஆகும் என்க!

## இட்ட சாவம் முட்டிய வகை:

இப்பாடலில் வந்து விழுந்துள்ள சொற்களில் சில முன்னறிவிப்புகள் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தப் பெற்றிருப்பது வியப்பினும் வியப்பு! அக்குறிப்பு மொழிகளை **ஆய்ந்து அறவுள்ளத்தின் வெளிப்பாட்டை ஊன்றிக் கவனித்து அறத்தின் உறுதியைக் கண்டு உணருங்கள்!**

வெந்து அழியும் நின் உடல் — என்பது, அவர் குண்டு வெளிப்படுத்திய தணலால் வெந்து மடிவர் என்பதையும்,

நின்னைக் கடும்புலி வரி எனச் சாவு கவ்வுக — என்னும் தொடர், அவரைப் புலிப் படையைச் சார்ந்த ஒரு புலி வந்து சாவச் செய்தது என்பதையும்,

திடும் என நினையொரு தீச்சுழல் சூழ்க — என்னும் தொடரில், 'திடீரென' என வாராது, 'திடும்' என வந்தது, அவரை அணுகி வெடித்த குண்டின் வெடியொலியாகிய 'டும்' எனும் குறிப்பொலி குறிப்பிடப் பெற்றிருப்பதையும், அவர் அவ்வாறு குண்டு வெடித்துப் பற்றியெரிகையில், அந் நெருப்புச் சுழல் பதினான்கடி உயரம் எரிந்ததை அனைவரும் தொலைவிலிருந்து கண்டதையும், அவர் மறைவால் அவர் மேற்கொண்ட அரசியல் சூழ்ச்சியும், தமிழரை அழிக்கும் அரக்கத் தன்மையும்(அரக்குதல் — அழித்தல்) அதிகாரச் சூழலும், வீழ்ச்சியுற்றதையும் இப்பாடல் முன்னறிவிப்பாக, முன் எச்சரிக்கையாக நுவன்றதையும் உணர்ந்து கொள்க!

மேலும் இதுவரை சாவப் பாடல் பாடிய, அஃதாவது அறம் பாடிய புலவர் சிலர் பாடல்களில் உள்ள கருத்துகள் பொதுவில் வெளிப்பட்டவையே! 'சாவுக', 'மறைந்தொழிக' எனும் பொதுவாக இறக்கின்ற – மறைந்தொழிகின்ற கூற்றுக ளையே அவை கொண்டிருந்தன. ஆனால், இவ்வறப் பாடலில் அவர் எவ்வெவ்வாறு சாவ – செத்து ஒழிய – வேண்டுமென்று கூறப்பெற்றதோ, அவ்வவ்வாறே அவர் செத்தொழிந்ததுதான் வியப்பினும் வியப்பு! அறத்தின் அனைத்து உணர்வுக் கூறுகளையும் புலப்படுத்தி நிற்பது!

அஃதாவது, அவர் திடுமென நோயினாலோ, ஒரு நேர்ச்சியினாலோ இறவாமல் "அவரது உடலை ஒரு கடும் புலி கவ்வியது போலச் சாவு கவ்வ வேண்டும்; 'தி...டும்' என ஒரு தீச் சுழல் சூழ்ந்து எரியுண்ண வேண்டும்; உடல் வெடித் துச் சுக்குநூறாகச் சிதற வேண்டும்; அச்சூது நிறைந்த —

பேசிய—நாக்கு— திக்கித் திணறி உள்ளே இழுத்துக் கொள்ளப் பட வேண்டும்; அவர் பொய் நெஞ்சம் —நெஞ்சாங்குலை —வெடித்துத் தெறித்து விழ வேண்டும்'' என்று பாடலில் அறம் பொங்கியெழுந்து காலத்திற்குக் கட்டளையிடுகிறது.

இனி, அறவாசிரியன் இடுகின்ற சாவம் மட்டுமே இங்கு ஏவப்பெறவில்லை; அவ் விராசீவ் என்னும் கொடிய ரால் அழிக்கப் பெற்ற ஆயிரக் கணக்கான இளைஞரும், ஒன்றுமறியா, இரங்கத்தக்க பெண்டிரும், அவர் ஏவிய படைகளால் அழிக்க உயிரோடு சிதைக்கப் பெறுகையில், அவர்தம் உயிர்கள் துடித்து, உள்ளம் உலவும் நெஞ்சாங் குலைகள் நொய்ந்து, நைந்து இட்டு வைத்த சாவங்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து, வலுப்பெற்றுக் கூடி, செயல் வடிவம் பெற்று, அவர் உயிரை வந்து முட்டட்டும்; அவ்வாறு முட்டலினாலே அவர் உடலின், முழுவடிவம் சிதைந்து மூளியாகி விடட்டும் — என்ற இவ்வறப் பாடல் நுவல்கிறதையும், அவ்வாறே நடந்துற்றதையும் அனைவரும் கண்டு இறும்பூது எய்துக!

இனி, இச்சாவப் பாடல் வெளிப்படுத்தப் பெற்ற பின், இதில் கூறப் பெற்ற நிகழ்வுகள் கட்டாயம் நிகழ்த்தப் பெறல் வேண்டும் என்று, நிலம், நீர், தீ, வளி, வானம் ஆகிய ஐம் பூதங்களுக்கும், இவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்ற கட்டளை வேறு இப் பாவின் இறுதி அடிகளில் கூறப் பெற்றுள்ளன.

அஃதாவது, 'தமிழினத்தைச் சீரழிக்கும் இச் செருக்குப் பிடித்த ஆட்சியாளரின் மறைவால் அவரின் குடி உயர் வின்றித் தாழ்ந்து, அமிழ்ந்து போக வேண்டும் என்றும், அக்குடி இவர் செய்த கொடுமைகளால் ஓர் அணுவின்றிப் படிப்படியாக அழிந்து போகவேண்டும் என்றும் கூறி, இவ்வாறு, தணந்து – கனன்று கொதிப்புற்றிருக்கும் இவ்வற வாசிரியனின் நெஞ்சத்தின் தவிப்பை, ஆற்றாமையால் வெளிப்போந்த இச்சாவக் கட்டளையை அவ்வைம்பூதங்க

ளும் செயல்படுத்துக' என்றும் முடிவு கூறி இப்பாடல் நிறைவுறுகிறது.

அப் பாடலில் கூறப்பெற்றது போலவே, இராசீவினது உடலை, மண் அணைத்துக் கொண்டது; தீ பற்றிக் கொண்டது; அவர் சாம்பலை நீர் உள் வாங்கிக் கொண்டது; அதைப் பனி(இமய)மலைச் சாரலில் தூவியபொழுது, அவ் வுடல் அணுக்களைக் காற்று தன்னுடன் கரைத்துக் கொண் டது; வானம் அவரின் ஆவியைச் சுவரிக் கொண்டது!

இவ்வகையில் இவ்வறவாசிரியன், இராசீவால் அழிக்கப் பெற்ற ஆயிரக்கணக்கான தமிழ் உயிர்களுடன் இணைந்து கூடி இட்ட சாவம் வந்து அவரை முட்டிக் கீழே தள்ளியது என்க!

இப்பாடல் இன்று நேற்றன்றி, மூன்றாண்டுகளுக்கு முன்னர் 1988 – ஏப்பிரலில் எழுதி வெளியிடப் பெற்றது. பொதுவாகவே அறப் பாடல்கள் மூன்று நாள்களில், அது தவறின் மூன்று மாதங்களில், அதுவும் தவறின் மூன்று ஆண்டுகளில் செயலுக்கு வரும் தன்மையுடையன. ஆய் வாளர்கள் இவ்வறவாசியரின் முந்தைய அறப்பாடல்களை நோக்கி அவ்வுண்மையைத் தெளிந்து கொள்க. அது போலவே இப்பாடலும் மூன்று ஆண்டுகளில், அஃதாவது 91 – மே மாதத்தில் செயலுக்கு வந்து, அச் சாவம் நன்கு நிறைவேறி இதன் ஆசிரியனுக்கும் மன நிறைவைத் தந்தது. தமிழின மக்களுக்கும் ஓர் ஆறுதலைத் தந்தது.

இவ்வாறின்றி, இப்பாடல், இராசீவின் மறைவிற்கு இரண் டொரு மாதங்களுக்கோ, இரண்டொரு கிழமைகளுக்கோ முன்பே எழுதப் பெற்று வெளிவந்திருக்குமானால், அதன் எதிர்விளைவுகளே வேறு வகையாக உருவாகியிருக்கும். இவர் தாம் இந்தச் செயலைத் திட்டமிட்டு, அந்தத் தமிழ் வீரப் பெண் தனுவிடம் கூறிச் செயல்படுத்தியிருக்கிறார்; அல்லது எழுதிய பின்னர்தாம், பிறர்க்கு இராசீவை இவ்வாறு கொல்ல

வேண்டும் என்ற எண்ணமே தோன்றித் திட்டமிட்டிருக்க வேண்டும் என்று கூறி நம்மேல் கடுமையான குற்றம் சாட்டிக் கொடுமையான தண்டனையைத் தந்திருப்பார்கள்!

## இராசீவ் மறைவுக்குப் பின் பார்ப்பனர் ஆடிய ஆட்டங்கள்:

இனி, இராசீவின் மறைவிற்குப் பின் தில்லியிலும் தமிழ் நாட்டிலும் நிகழ்ந்த, நிகழுகின்ற செய்திகளைப் பற்றிச் சிறிது பேசுவோம்.

இராசீவ் மறைவைப் பற்றித் தில்லியிலுள்ள பேராயக் கட்சித் தலைவர்களுள்ளும், தமிழகத்திலுள்ள பேராயக் கட்சித் தலைவர்களுள்ளும், உண்மையிலேயே வருத்தப் பட்டவர் ஒரு சிலரே! மற்றவர்களெல்லாரும் அவரால் பெற்ற பணம், பதவிகள் இனி கிடைப்பதற்கு வாய்ப் பில்லையே என்ற நிலையிலும், சிலர் அவர் தொலைந்ததே நல்லது என்ற நிலையிலுமே நினைத்து வருத்தமும், மகிழ்வும் கொண்டார்கள் என்றே கருதுதல் வேண்டும்.

இராசீவின் சாவை ஏதோ ஒரு மேன்மகன் மறைவாகவே விளம்பரப்படுத்திக் கலகலத்துப் போயிருக்கும் தங்கள் கட்சியைக் கட்டுவிக்கவே பயன்படுத்திக் கொண்டனர். சேரியில் வாழும் முதிய, இளைய ஏழைப் பெண்களையும், முதியவர்கள் சிலரையும் அழைத்து, அவர்களுக்கு உணவும், பணமும் கொடுத்து, ஏதோ தங்களுக் கெல்லாம் படியளந்த ஆண்டவன் ஒருவன் மறைந்ததுபோல், அவர்கள் மாரிலும், முகத்திலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழவைத்து, அக்காட்சிகளைப் படம் பிடித்துத் தொலைக்காட்சிகளிலும், திரையிலும் காட்டி, அவரைத் தெய்வ நிலைக்கு உயர்த்திப் பார்ப்பன அதிகாரிகளும், அமைச்சர்களும், அவர்களின் அடிவருடிகளும் ஒரு மாயையே மக்களிடம் உருவாக்கிக் கொண்டனர்.

இனி, அவர் மறைவை மக்கள் இரக்கம் கொள்ளும்

அளவிற்கும், எதிர்க்கட்சிகளின் மேல் வெறுப்புக் கொள்ளு மாறும் சூழ்ச்சியாகப் பயன்படுத்திக் கொண்டனர். தமிழக மக்கள் தி.மு.க. மேல் முழு வெறுப்புக் கொள்ளுமாறு, அவர் மறைவை மிகைப்படுத்தியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மேல் ஓர் அச்சமும், வெறுப்பும் கொள்ளுமாறு கதைகள் பல கட்டியும், அதிகாரிகளை விட்டுத் தமிழீழ ஏதிலிக ளையும், அவர்களுக்கு ஆதரவு தந்தோர்களையும், தருவோர்க ளையும் தேடிப்பிடித்து, ஏதோ அவர்களால்தாம் இராசீவ் இறந்தது போலப் பழி சுமத்தியும், அச்சுறுத்தியும், கொடுமைகள் பல செய்து துன்புறுத்தியும், தளைப்படுத்தியும் தங்கள் தேர்தல் வெற்றிக்காகப் பல உத்திகளைப் பயன் படுத்தி/வெற்றிகளையும் பறித்துக் கொண்டனர்.

ஏற்ற இறக்கமாக இருந்த தில்லி நாடாளுமன்றத்தை யும் பேராயம் தக்க வைத்துக் கொண்டது, தமிழகத்திலோ, பச்சைப் பார்ப்பனீயத் தலைமையில் அதற்குக் கட்டியங் கூறிய வீடண பிரகலாதன்கள் துணையுடன், இந்து மதத் திற்கும், பார்ப்பனர்களுக்கும் முழுநலந் தேடுகின்றபடி ஓர் அழுத்தமான ஆட்சி அமைந்தது. கால மாற்றங்களை முன் கூட்டியே உணரவும், காற்றடித்த பொழுதே தமிழ்க் கென்றும் தமிழர்க்கென்றும் ஓர் எள்ளின் மூக்கத்துணை நலமும் தேடவும் இயலாத கலைஞர் கருணாநிதி ஆட்சிக் கட்டிலிலிருந்து அப்புறப்படுத்தப் பெற்றார்.

### பார்ப்பனீய ஆட்சிக் கொடுமைகள்!

ஆரியப் பார்ப்பனீயம் தமிழகத்தில் அமைத்த ஆட்சி, கடந்த ஐம்பதாண்டுக்காலத் தமிழர்களின் உள்ளுணர்வை யும், முன்னேற்ற வளர்ச்சிகளையும் கிள்ளியெறிந்தும், வெட்டித் தகர்த்தும் பலவகைக் கரவான கொடுமைகளைச் செய்ய முற்பட்டு விட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சியும் விடுதலை உணர்ச்சியும் முயற்சியும் இந்தியாவில் – குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பார்ப்பனர்க

ளின் உள்ளத்திலும் உறுத்தல்களாகவே இருந்து வந்தன. அவற்றைச் சீர்குலைப்பதற்கு இராசீவ் என்னும் காசுமீரப் பார்ப்பனரைப் பயன்படுத்திக் கொண்டு வந்தது பார்ப் பனியம். அதன் செயற்பாடுகளில் ஒன்றுதான் இராசீவ் இலங்கைக்கு அனுப்பிய அமைதிப்படை. அதற்கும் தடை வந்தவுடன் இராசீவை ஆட்சியில் மீண்டும் ஏற்றிவைக்க உறுதி பூண்டிருந்தது பார்ப்பனீயம். இடிமேல் இடி விழுந்தது போல் இராசீவ் மறைவு நேரவும், அதையே சாக்காக வைத்துக்கொண்டு தமிழகத்தில் ஆட்சி அமைத்த செயலலிதா என்னும் பார்ப்பனீயப் பச்சைப் பாம்பு, விடுதலைப் புலிகளை விரட்டோ விரட்டென்று தமிழகத்தை விட்டே விரட்டி வருகிறார். தமிழர்களுக்கு இங்கு மட்டுமன்று, இவ்வுலக உருண்டையில் எங்குமே உரிமை பெற்ற ஒருநாடு கிடைத்துவிடக் கூடாதென்னும் எண்ணத்தில் விடுதலைப் புலிகளின் மேல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. அவற்றுக்கு நடுவண் அரசும் துணையாகவும் தூண்டுகோலாகவும் நின்று வருகிறது.

இக் காலகட்டத் தமிழக அரசியல் பெரும் இக் கட்டானது. பார்ப்பனீயத்தை விடப் பார்ப்பனீயத்திற்குத் துணைபோகும் இரண்டகர்களும் காட்டிக் கொடுப்பான்க ளும் தங்களுக்கு நலம் சேர்த்துக்கொள்ள இக் காலகட்டத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள முனைந்து நிற்கின்றனர். அதன் வெளிப்படையான விளைவுகளே நெடுஞ்செழியன், சோமசுந்தரம், கிருட்டிணசாமி, அரங்கநாயகக் கூட்டங்கள். ஆளுக்கு ஆள் மிடா விழுங்கிகள்! கடப்பாரையையே கரைத்துக் குடித்து ஏப்பம் விடுகின்ற ஊழல் பெயர்வழிகள், இவர்களின் ஒட்டு மொத்தக் கூட்டுத் துணையால், முதல்வர் செயலலிதா திரைப்படத்தில் ஆடியதற்கு மேல் அரசியல் அரங்கில் ‘தையா தக்கா’ என்று குதியாட்டம் போடத் தொடங்கிவிட்டார்.

இந்த இழிபாடுகளையும், இடிபாடுகளையும் எவ்வாறு

எதிர்கொள்வது? ஏற்கனவே தமிழினம் சாதி முள்வேலிகளாலும், மத மதில்களாலும், பல்லாயிரம் பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கின்றது. இந்த நிலையில், அரசியல் கட்சிகள் வேறு அவர்தம் நோக்கங்களையும் கொள்கைகளையும் செதிள் செதிள்களாகப் பிரித்தெடுக்கின்றன. திரைப்படக் கயவர்கள் வேறு மக்களின் ஒருமுகச் சிந்தனைகளை வளரவிடாமல் தடுத்துக் கொண்டு சதிராட்டம் போட்டு வருகின்றனர். இவ்விருண்டு வரும் சூழ்நிலையிலும், மக்களெல்லாம் அரண்டு கிடக்கும் அரசியல் கொலைவெறிப் பதற்றங்களுக்கிடையிலும் தமிழக மக்களை மீட்டெடுப்பது எப்படி என்று உண்மையான — ஆனால் வலுக்குன்றிய சிறு சிறு இயக்கத் தலைவர்களெல்லாரும், சிந்தித்துத் தம்முள் ஒன்றுபடும் திறனின்றிக் கண்ணாம் விழிகள் பிதுங்கிக் கிடக்கின்றனர். அறிஞர்களெல்லாரும் ஆளுக்கொரு கொள்கை வழியைப் பற்றிக் கொண்டு, தங்களின் இணைபாதையை மேலும் மேலும் அகலமாக்கிக் கொண்டு, சோர்ந்து கிடக்கும் தமிழர்களிடையே தங்கள் தங்கள் அறிவு விளைச்சலுக்கு ஆக்கந் தேடிக் கொள்கின்றவர்களாக மாறி வருகின்றனர். தங்கள் விளைவு மூட்டைகளுக்கு ஏற்ற விற்பனைச் சந்தைகளை அமைத்து வருகின்றனர். தமிழகமே இருண்ட புதர்க்காடாகவும், மருண்ட சுடுகாடாகவும் மாறி வருகின்றது.

இவற்றுக்கிடையில் பேராயக் கட்சியை அடுத்த தலைமுறை வரையிலேனும் நகர்த்திச் செல்லத் தக்க தலைமையில்லாமல் அஃது அல்லற்படுவதைச் சரிகட்ட, இராசீவின் மனைவி சோனியாவையேனும் இந்தியத் தலைமை தாங்கச் செய்ய அரும்பெறல் முயற்சிகளைச் செய்து, மனஞ்சலித்த பின்னர், வடவிந்தியத் தலைவர்களும், தென்னிந்தியத் தலைவர்களும் கைகளைப் பிசைந்தும் கண்களைக் கசக்கியும் போலி நாடகங்களை மக்கள்முன் ஆடிக் காட்டுகின்றனர்.

எப்படியோ, இந்திய அரசியல் தலைமை வாயாமல்,

இந்து மதத் தலைவர்களுள் ஒரு பெரும் பார்ப்பனீய வெறியரைத் தேர்ந்தெடுத்து, அனைத்திந்தியத் தலைமைக்கு அத்துவானி போன்றவர்களை முன்னுக்குக் கொண்டுவரப் பார்ப்பனர்கள் மிகு துடிப்புடன் இயங்குகின்றனர்.

## இவற்றுக்கிடையில் தமிழகத்தின் நிலை:

இவ் வதிர்வு நிலைகளுக்கிடையில் எந்தமிழ் இனம் அடுத்த தலைமுறைக்கு ஏற்ற ஒரு பெருந்தலைமைக்கு ஆள் பார்த்து ஏங்கிக் கிடக்கின்றது. சென்ற தலைமுறையில், தமிழர்களின் நம்பிக்கை விண்மீன்களாகக் காட்சியளித்த தமிழினத் தலைவராம்(!) கலைஞர், தம் தோள்கள் சாம்பியும், மனம் கூம்பியும், அடுத்த அடி எங்கு வைப்பது எதில் வைப்பது என்று அல்லற்பட்டு ஆற்றாமல் கிடந்து வருகிறார்.

திராவிடக் கூட்டத்தைக் கட்டமைத்த தந்தை பெரியார் பிறங்கடையரான திராவிடர் கழகத் தளபதி(!) கி. வீரமணியோ, தம்மிடம் குவிந்துள்ள காசுகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டித் திருட்டு விழிவிழித்துப் பார்ப்பன முதல்வர் செயலலிதாவின் ஆயிரம் இயங்கிகள் புடை சூழ வரும் வழிநடைச் செலவுகளுக்கு வெற்றிப் பதாகைகளும், பட்டுக் கம்பளமும் விரித்துப் புகழ்ப் பராவுதல் செய்து வருகிறார்.

இனி, எஞ்சியுள்ள தமிழர் இயக்கங்களின் தலைவர்கள் ஒரு சிலரும், தனித்தனியான முழக்கங்களை அவ்வப் பொழுது எழுப்புவதும், பின்னர் அடுத்தடுத்து வரும் அரசியல் வாய்ப்புகளுக்கு நாள் பார்த்துக் கிடப்பதுமான அவலங்களிலேயே மூழ்கி, எஞ்சியுள்ள காலங்களை மெல்ல மெல்லக் கடந்து வருகின்றனர். அவர்களுள் பாட்டாளி மக்கள் கட்சி அமைப்பாளர் திரு. இராமதாசு அவர்களும், திரு. பழ. நெடுமாறன் அவர்களும், திரு. நகைமுகன் அவர்களும் நம் நம்பிக்கைக்கு உரியவர்களாகப் படுகின்றனர். இனி, தம்பி பிரபாகரனோ ஒரு தனிப் போராளியாகவே இறுதி

வரை நின்று பொருதிச் சாவது என்ற விடுதலை வேட்கை யுடன் பல்வேறு இடையூறுகளுக்கிடையிலும் தோள் தாழாது போராடி வருகின்றார்!

நிலைகள் இவ்விவ்வாறு, தமிழின முன்னேற்றத்திற்கும் உரிமை மீட்புக்கும் எதிரானவையாக இருப்பதை நாம் மறந்துவிடவோ மறுத்துவிடவோ முடியாது. கடந்த இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இப்பெருந் தமிழினத் துள், திருவள்ளுவப் பேராசான் கண்ட *'பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும்'* இன்னும் மறைந்தபாடில்லை.

தந்தை பெரியாரின் தன்மானத் தமிழுரிமை மீட்புத் தனிநாட்டுப் பெருங்கொள்கையும், புரட்சிப் பாவேந்தரின் அருந்தமிழாட்சியின் இரும்பேரிலக்கணக் கோட்பாடாகிய *'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்'. 'தமிழ்ப் பகைவன் முதலமைச்சாய்த் தமிழ் நாட்டில் வாராது தடுத்தல் வேண்டும்!'* — எனும் கனவு வரிகளும், *'ஆன என் தமிழர் ஆட்சியை நிறுவும்'* தொலைநோக்குப் போராட்டப் பார்வையும் என்னவாயின? எவருடைய நினைவில் இன்னும் எண்ணத்திரட்சியாக உள்ளன? எப்படி யும் காலம் தானாகவே கனியப் போவதில்லை.

### தமிழ் இளைஞர்களின் இன்றைய அவல நிலை:

இந் நிலையில், இற்றை இளைஞர்கள் சிலர், தமிழீழ உரிமை வெடிப்புகளைக் கண்டு, இங்கும் தமிழின உரிமைப் போராட்டம் ஒன்று உருப்பெறாதா என்னும் ஏக்கத்தில் காலத்தையும், இடத்தையும், நாட்டுநிலைகளையும் கூர்த்து நோக்கியவாறு இருப்பதையும் நாம் உணர முடிகிறது. இவ் விளைஞர்களுடன் தோளொடு தோளாக இருந்து இயங்க வேண்டிய மாணவர் கூட்டமோ, வெறும் வீணவர் கூட்ட மாக, வெள்ளித் திரையில் நடக்கும் வேடிக்கைச் சண்டைக ளைப் பார்த்து, வெறும் வாயைக் குதப்பிச் சுரக்கின்ற எச்சிலுடன், தங்கள் வீர உணர்வுகளையும் விழுங்கி,

உணர்வு எழுச்சிகளையும் ஆற்றிக் கொள்கின்றனர். அடுத்து, ஊழல் மலிந்ததும், உலுத்தர்கள் நிரம்பியதும், அரம்ப மாக்கள் நிரம்பப் பொருள் இரைத்துத் திறம் பெறாது உள்ளம் இழிந்ததும், வரம்பிலாக் கயமை நிறைந்ததுமான இக்கால அரசியல் ஒப்போலைக் களங்களை நம்பியும் தேசிய இன விடுதலையைத் தமிழினம் பெற்றுவிட முடியாது; அந்த முயற்சியைத் தள்ளிப் போடவும் முடியாது.

எனவே, உண்மையான தமிழின மறுமலர்ச்சிக்கும், உரிமை மீட்புக்கும், முழு இறையாண்மை பெற்ற தன்னுரிமைத் தமிழ் நாட்டு அமைப்பிற்குமாக, உள்முனைப்பும் உறுதிவேகமும் கொண்டு, இற்றைச் சூழ்நிலைகளை முறியடித்து, வெற்றிப் பாதையை உருவாக்கிக் கொடுக்கும் பொதுமக்கள் புரட்சி ஒன்றே கால்கொண்டு எழுச்சி பெறுதல் வேண்டும். ஆனால் அடிமை உணர்வும், சாதி, மத வெறியுணர்வுகளும், அறியாமையும், ஏழைமையும் நிறைந்த இன்றைய பொது மக்களிடம் இவ்வினப் புரட்சி கால் கொள்ளுமா, எழுச்சி பெறுமா என்பதும் ஓர் ஐயமே.

## இளைஞர்களின் எழுச்சிக் கூறுகள்:

இனி, இதற்கு நேரம் மறுதலையானதும், இளைஞர்கள் சிலரின் உள்ளத்தே முகிழ்த்து வருவதுமான கருவிப் புரட்சி என்பது, உலகின் இன்றைய வரலாற்று வளர்ச்சி நிலைகளுக்கும், போர் அறிவியல் வளர்ச்சி முதிர்வுகளுக்கும் பொருந்தி வரும் என்று நினைப்பதற்கு இயலவில்லை. இளைஞர்களின் கைகளில் கிடைக்கும் கருவிகளைவிடப் பன்மடங்குப் புதினமும், வலிவும், மிகுதியுமான கருவிகள் ஆட்சியதிகாரக்காரர்களின் கைகளில் கிடைக்க வாய்ப்புகள் உண்டன்றோ? அதனால் மிகுதியான உயிர் அழிவுகளுக்கும், கால நீட்டிப்புக்குமே இடனுண்டு.

ஆகவே, இராசீவ் போலும் அரசியல் அழிம்பும், வஞ்சகமும், பதவி வெறியும், பகட்டு ஆரவாரமும் கொண்ட

தலைவர்களுக்கும், செயலலிதா போலும் கவர்ச்சியும் கரவும் சூழ்ச்சியும் ஏமாற்றும் பழிவாங்கும் உணர்வும் கொண்ட தலைவர்களுக்கும், நேர் எதிராக மக்களைத் திரட்டிப் புரட்சி செய்வதே மிகச் சரியானதும், வலிவானதுமான ஓர் அணுகுமுறையாகும். இவ்வாறல்லாத இனவுரிமை மீட்புக்கு *'முண்டையின் மகனே'* போலும் அறப்பாடல்களை எழுதியே மறப்போர் நிகழ்த்தி விட முடியாது. இம் மெய்யறிவான நிகழ்வுகளில் மாந்தவியல் கோட்பாடு முனைமழுங்கிப் போகும்; அறிவியல் மெய்ம்மம் இழுக்குற்றுத் தாழும்; மாந்தர்களிடம் வெறுமையும் ஏக்கமும் எதிர்பார்ப்பும் மடிமையும் பகுத்தறிவின்மையும் ஆழக் குடிகொண்டு விடும்.

### கற்பி, ஒன்றுபடுத்து, போராடு:

எனவே, மக்களை எழுச்சியுறச் செய்யும் முயற்சியில் தமிழின முன்னேற்ற உணர்வு நிலை, அறிவு நிலை, கொள்கை நிலை, செயல் நிலைத் தொண்டர்கள் மிக ஆழமாகவும் அகலமாகவும் கவனமும் கருத்தும் கொள்ளுதல் வேண்டும். இவ்விடத்தில் அண்ணல் அம்பேத்கர் மக்களுக்கு அளித்த **கற்பி, போராடு, ஒன்றுபடுத்து** என்னும் மூன்று முனைப்புணர்வுப் படிநிலைகளையும் (Evolution) சிறிதே மாற்றியமைத்து, **கற்பி** (Educate), **ஒன்றுபடுத்து** (Organise), **போராடு** (Agitate) என்று முறைகொண்டு, செயல் படுத்துதல் வேண்டும்.

மக்களுக்குக் கற்பிப்பது மிக மிக இன்றியமையாதது. கற்பிக்க வேண்டியதில் முகாமையானது கல்வி மட்டுமன்று; நல்லுணர்வும் ஆகும். **நல்லுணர்வுதான் விழிப்புணர்வைத் தரும்.** இவ்வுணர்வைத்தான் இன்றைய அரசியல் கட்சிகள் மக்களுக்கு ஊட்ட விரும்புவதில்லை. ஏனெனில் மக்கள் விழிப்படைந்து விட்டால் தங்களின் ஏமாற்றுகள், சூழ்ச்சிகள், சூதுகள், போலியும் பொய்ம்மையும் நிறைந்த கரவான நடவடிக்கைகள் முதலியன அவர்களுக்கு விளங்கிவிடுமே,

தங்கள் மறைவான நடவடிக்கைகள் அம்பலமாகிப் போகுமே என்பதால், மக்கள் அறிவும், உணர்வும் பெறுவதை அவர்கள் விரும்புவதில்லை.

இந்திராவும் இராசீவும் மறைந்து போனாலும் இந்திய, தமிழக அரசியல் களங்களில் இன்னும் அவர்களின் ஏமாற்று எத்துகள், அரட்டல் புரட்டல்கள், அரைசல் புரைசல்கள் யாவும் மறைந்து விடவில்லை. இப்பொழுதுள்ள அரசியல் காரர்கள் சில நிலைகளில் அவர்களைப் போலவும், பல நிலைகளில் அவர்களைவிடவும் தில்லு முல்லுகளையும், தமிழின அழிப்புகளையும் செய்து கொண்டுதான் வருகின்றனர்.

## செயலலிதாவின் ஆட்சிக் கோட்பாடு:

தமிழ்நாட்டு ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றிய செயலலிதா தமிழினத்தின் மேல் தொடுத்துள்ள வஞ்சகத் தனமான அழிவுப் போரின் உத்திகள் கொஞ்சநஞ்சமல்ல. தம் அரசியல் எதிரிகளாக அவர் கருதும் கலைஞரையும், அவர் கட்சியினரையும் பழிவாங்குவதாகக் கலைஞர் உட்பட அனைவரும் கருதுகின்றனர்; குற்றஞ் சாட்டுகின்றனர். **ஆனால், செயலலிதா தம் ஆட்சியதிகார வன்மையால், தமிழினத்தையே அழித்தொழிக்க உறுதி பூண்டுள்ளார் என்பதே முழு உண்மையாகும்.** இதை விளங்கிக் கொள்ளாமல், அவரின் அடிவருடிக் கொண்டிருக்கும் தமிழின வீடணர்களான வீரப்ப, நெடுஞ்செழியப் பொறுக்கித் தின்னிக் கும்பல் அவருடன் இணைந்து தம் இனநலத்தையே கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டுள்ளது.

கடந்த கால அரசியல் கண்ணோட்டங்களையும், இக் கால அரசியல் நடவடிக்கைகளையும் சரியாக மதிப்பிட்டுச் சொல்வதானால், பெரியார் காலத்தைவிட, அண்ணா காலத்தில் பார்ப்பனர்கள் விழிப்படைந்திருந்தனர். அண்ணா காலத்தைவிட, கலைஞர் காலத்திலும், கலைஞர்

காலத்தைவிட, ம.கோ.இரா. காலத்திலும், அவர்கள், மேலும் விழிப்பும் எழுச்சியும் பெற்றிருந்தனர். இனி ம.கோ.இரா. காலத்தைவிட, இன்றைய செயலலிதா காலத்தில் பார்ப்பனர்கள் முனைப்புடனும் முழுத்திறனுடனும் சூழ்ச்சியுடனும் இயங்குகின்றனர் என்பதை யாருமே மறுக்க முடியாது.

செயலலிதா பார்ப்பனீயத்தின் ஒரு கொடுமுடி. 'துக்ளக்' 'சோ' இன்னொரு கொடுமுடி. அத்துவானி, வாச்சுபாய் போன்றவர்கள் வேறொரு கொடுமுடி; தலைமையமைச்சர் நரசிம்மராவ் போன்றவர்கள் மற்றுமொரு கொடுமுடி. இவர்களைப் போலவே தினமணி கசுத்தூரி ரங்கன் போன்றவர்கள் தமிழையும், தமிழர்களையும் நயவஞ்சகமாக வீழ்த்தும் பெரும் பள்ளத்தாக்குகள். இத்தகைய எதிர்ப்புகள், சூழ்ச்சிகள், நயவஞ்சகங்கள் போன்றவற்றின் நடுவில்தான் தமிழர்கள் தம்தம் மொழிக்காகவும், இனத்துக்காகவும், நாட்டிற்காகவும் போராடவும், போரிடவும் வேண்டியுள் ளார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

எனவே, ஓர் இந்திரா, ஓர் இராசீவ் ஒழிந்ததனாலேயே தமிழினம் தான் வெற்றிக்குகந்த சூழ்நிலையை அடைந்து விட்டதாக நாம் கூறிவிட முடியாது. தமிழின எதிரிகள் ஒரு படி வலுப்பெறும் அதே நிலையில், தமிழின இரண்டகர்க ளும் வீடணர்களும் அதற்கும் மேல் ஒரு படி மிகுந்து நின்று அவர்களுக்குத் துணை போகிறார்கள். செயலலிதா பேசுவதற்கு மேல், நெடுஞ்செழியனும், கிருட்டிணசாமியும், சோமசுந்தரமும், வீரப்பனும், அரங்கநாயகமும் பேசுவதைப் பார்க்கும் பொழுது இவர்களின் உடலில் ஓடுவது தமிழ்க் குருதியா அல்லது பார்ப்பனக் குருதியா என்பது தெரிய வில்லை.

செயலலிதா ஆட்சிக்கு வந்ததிலிருந்து அவர் அறிவித் திருக்கும் செயல் திட்டங்களுக்கு அளவில்லை. ஆனால், அவற்றுள் செயலுக்கு வந்தவை விரல்விட்டு எண்ணத்

தகுந்தவையாகக்கூட இரா என்பதைக் கருத, இத்தமிழின வீடணர்கள் எதைக் கருத்தில் கொண்டு செயலலிதாவை அளவிறந்து பாராட்டுகின்றனரோ, நமக்கு விளங்கவில்லை. அவர் ஒவ்வோர் ஊருக்கும் செல்லும் பொழுது பண்ணுகிற ஆர்ப்பாட்டமும் அழிம்பும் பகட்டுகளும் இருக்கின்றனவே, அவை, நாட்டு நலன் கருதும் நன்னெஞ்சங்களுக்குப் பொறுத்துக் கொள்ள இயலாத துன்பத்தைத் தருவனவாகும்.

## தமிழினம் மீட்சி பெறவேண்டும்!

இனி, எல்லாவற்றுக்கும் மேலாக, செயலலிதாவும், பங்காரப்பாவும், நரசிம்மராவும் அரசியல், அதிகாரம், ஆட்சி என்னும் பெயரால், காவிரி நீர்ச் சிக்கலை இனச் சிக்கலாக மாற்றிக் கருநாடகத்தில் தமிழர்களை அழித்தொழிக்கும் கொடுமைகளுக்கு அளவே இல்லை. இக்கொடுமைகளை எதிர்த்துத் தமிழகத் தமிழர்கள் குரல் கொடுப்பதைத் திசை திருப்புவதற்கு எனக் கருநாடகத் தமிழர்களுக்கு இழப்பீடுகள், ஏதிலியர் காப்பகங்கள், உதவித் தொகைகள், உணவுப் பொருள்கள், துணிமணிகள் முதலியவை தருவது போலும் அறிவிப்புகள் மாநில அரசிலிருந்தும், நடுவண் அரசிலிருந்தும் அன்றாடம் வெளிவருகின்றன.

கருநாடகத் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றார்கள்; வெளிப்படையாக வெட்டப்படுகின்றனர்; வீடுகள் தீ வைத்து எரிக்கப்படுகின்றன; பொருள்கள் கோடிக் கணக்கில் கொள்ளையடிக்கப்படுகின்றன; சூறையாடப்பெறுகின்றன; பெண்கள் நட்ட நடுச் சாலையில் கற்பழிக்கப்படுகின்றனர்; சேலைகளை அவிழ்த்துக்கொண்டு ஓட ஓட விரட்டியடிக்கப்படுகின்றனர்; குழந்தைகள் எரிகின்ற நெருப்பில் தூக்கி எறியப்படுகின்றனர். இத்தனையும் இந்திய ஒருமைப் பாட்டு எல்லைக்குள், பாரத கலை, பண்பாடு, நாகரிகம் பேசும் மடயர்களின் ஆட்சி வரம்புக்குள் நடைபெறுகின்றன. இவற்றைத் தடுக்கவோ அடக்கவோ, குற்றவாளிகளைத்

தண்டிக்கவோ, நடுவணரசை ஆட்சி செய்யும் பேடிகளால் முடியவில்லை; இதைக் கண்டிக்கவோ எதிர்த்துக் குரல் கொடுக்கவோ மாநிலத் திருடர்களின் ஆட்சிகளால் முடிய வில்லை; ஆனால் தமிழர்களுக்கு ஏற்பட்ட சேதங்களையும் இழப்புகளையும் மதிப்பிட்டு இழப்பீடு தருவோம் என்று பெட்டைப் பெருமையாக அறிவிக்கின்றனர். இவ் வெட்கங் கெட்ட வீணர்களை நம்பியிருப்பதை விட, அவர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருப்பதை விட — தமிழர்கள் தங்களுக் கென ஒரு தனித் தமிழ்நாட்டை உருவாக்கிக் கொள்ள முயற்சி செய்வதில் என்ன தவறு நேர்ந்து விடும்?

எனவே, தமிழர்களுக்கு முழு இறையாண்மையுள்ள ஒரு தனி நாட்டின் தேவை இந்திரா, இராசீவின் மறைவுக்குப் பின்னர், நாளுக்கு நாள் மிகுந்து கொண்டே போகின்ற உண்மையை, இனிமேலாகிலும், அரசியலில் புகுந்து எதையோ விளைவிக்கப் போவதாகக் கூறிக்கொண்டிருக் கும் தமிழின அரசியல்காரர்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டுச் சிறிய பெரிய கட்சிகளின் தலைவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வுணர்வுக்குத் தமிழீழப் போராளிகளின் துணை நமக்குக் கிடைத்தாலும் அதில் தவறில்லை என்று நாம் கருதுகின்றோம். ஏனெனில் பங்காரப்பாவைவிட, நரசிம்ம ராவைவிட, செயலலிதாவைவிட, தமிழீழ போராளிகளோ, பிரபாகரனோ கொடியவர்கள் இல்லை. இவர்களை நம்பி நாம் உயிர் வாழ்வதைவிட, அவர்களை நம்பி உயிர்ப் போராட்டம் – விடுதலைப் போராட்டம் நடத்தி உயிரிழப்பது மேல்! மேல்!! மேல்!!!

உரிமைக் கதவை, அவ் வொருநாள் வரும்வரை
உரத்த கைகளால் ஓங்கித் தட்டுவோம்!
நரிமைக் கயவர்கள் திறவா விடில், அதை
நானூறு சில்லுக ளாய் உடைத் தெறிவோம்!

# பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களின் நூல்கள்

○○○

| | | |
|---|---|---|
| 1. | கொய்யாக்கனி (பாவியம்) | 16.00 |
| 2. | ஐயை | 30.00 |
| 3. | பாவியக் கொத்து | 22.00 |
| 4. | கற்பனை ஊற்று | 40.00 |
| 5. | பள்ளிப் பறவைகள் (குழந்தைப் பாடல்கள்) | 18.00 |
| 6. | நூறாசிரியம் (விளக்க உரையுடன்) | 100.00 |
| 7. | திருக்குறள் மெய்ப்பொருளுரை (முதற்பகுதி) | 150.00 |
| 8. | உலகியல் நூறு (பொழிப்புரையுடன்) | 10.00 |
| 9. | பாவலரேறு பாடல்கள் – கனிச்சாறு (எட்டு தொகுதிகளாக) | (அச்சில்) |
| 10. | மகபுகு வஞ்சி | (அச்சில்) |
| 11. | எண்சுவை எண்பது | (அச்சில்) |
| 12. | அறுபருவத்திருக்கூத்து | (அச்சில்) |
| 13. | கழுதை அழுத கதை | (அச்சில்) |
| 14. | தன்னுணர்வு | (அச்சில்) |
| 15. | பாவேந்தர் பாரதிதாசன் | 25.00 |
| 16. | இலக்கியத்துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள் | 5.00 |
| 17. | ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் | 7.00 |
| 18. | இனம் ஒன்றுபடவேண்டும் என்பது எதற்கு ? | அச்சில் |
| 19. | சாதித் தீமைகளும் அதை ஒழிக்கும் திட்டமும் | 3.00 |
| 20. | செயலும் செயல்திறனும் | 45.00 |
| 21. | தமிழீழம் | 70.00 |
| 22. | ஓ! ஓ! தமிழர்களே! | 11.00 |
| 23. | தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும் | 10.00 |
| 24. | இட்ட சாவம் முட்டியது | 10.00 |
| 25. | நெருப்பாற்றில் எதிர்நீச்சல் | 6.00 |
| 26. | இளமை விடியல் | 50.00 |
| 27. | வாழ்வியல் முப்பது | (அச்சில்) |
| 28. | பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர் | 60.00 |
| 29. | தென்மொழி (பாவலரேறு ஐயா அவர்களின் 2–ஆம், 3–ஆம் ஆண்டு நினைவு மலர்) | 16.00 |